தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனுர் திருவாய் மலர்ந்த "குறள்" கூடம். அதிகாரம் கூம். செய்யுள் "மயிர்நீப்பின் வாழாக்கவரிமானனுருயிர்நீப்பர்மானம்வரின்" இ-ள் மயிர்நீப்பின (தன்மயிர்த்திரளிலொரு) மயிரையிழந்தாலும் வாழா (உயிர்) வாழாத கவரிமா கவரிமானை அன்னுர் ஒப்பவர் உயிர நீப்பர்(தம்)முயிரை யிழப்பர் மானம்வரின் மானத்தைப்(பொருந்துமெல்லை)வரினென்றவாறு. இச்செய்யுளிற் கவரிமான் தன்மயிர்த்திரளிலொரு மயிரை இழந்தாலும் தன்னுயிரை வைத்திராமல் செத்துப்போமென்று சொன்னது உண்மையோ. அல்லது இச்செய்யுளின் கருத்து வேறேதும் பொருளுளிலக்கு தோவெனச் சிற்றறிவோனுக்கு விளங்காமையால் முற்றறிவோர் யாரேனுங்கற்றறி புலவர் பத்திராதிபதியாகிய தாரகையில் அடியேனுக்குச் சற்றறிவிக்கப் பிரார்த்திக்கி

றேன், அன்றியும் கவரிமா ஒரு மயிரிழந்தாலும் செத்துப் போவது இங்கிலீசுவிலங்குகளைப்பற்றிய புத்தகங்களிற் சொல்லியிருக்குதாவெனப் பத்திராதிபதி அறிவிக்க மன்றாடுகிறேன். பிழைகளிருந்தாற்றிருத்திக்கொள்வது புலவர் கடன்.

இப்படிக்கு

செய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருக்குறள்ப் பிரியன்.

P. J.

உதயதாரகைப் பத்திரிகையை நடத்துகிறவருக்கு விண்ணப்பம்.

அருமையான தாரகையே,

இந்த இந்து தேசத்திலுள்ள சமஸ்த மனிதரையும் கணக்கிட்ட புத்திமான்கள் இதிலே சற்றேறக் குறையப் பதினேந்துகோடி தேவர்களுண்டென்று சொல்லுகிறார்கள். இத் தேசத்தார் வணங்குகிற தேவர்களோ மூப்பத்துமுக்கோடி என்றும் இவர்களுக்கு மேலாகப் பஞ்ச கத்தாக்கள் இருக்கிறார்களென்றும் அவர்களுக்கு மேலாகத் திரிமூர்த்திகளிருக்கிறார்களென்றும் ஸ்தபமதஞ் சொல்லுகின்றது. இத்தேவர்களே எல்லாம் சாஸ்திரவழியாய் ஆராய்ச்சிபண்ணின ஞானவான்களோ இவர்கள் தேவர்களல்லவென்றும் இவர்களுக்கு மேலான சுயம்புவாகிய ஓர் கடவுள் இருக்கிறாரென்றும் அவருடைய பேரையும் இலட்சணத்தையுங் கிரகிக்கக்கூடாதென்றும் அறிவித்திருக்கிறார்கள்.

விருத்தம்

கடவுளோவொருவனுண்டே வேதமொன்றே காரணசற்குரு தீட்சைதானுமொன்றே
அடைவுடனே அவரருளும்பதவியொன்றே அம்புவியில் மனுப்பிறவியானதொன்றே
கடைவழியும் பலனுவோர்க்கொன்றேயல்லால் நால்வேதம் அறுசமயநடக்கையுண்டோ
திடமுடைய தேவர் பலருண்டென்போர்கள் தீயநரகுக்காளாவர் திண்ணந்தானே,

என்று கொங்கணர் சொன்னார்.

கேளுங்கள், கிறிஸ்துமதமோ அந்த ஒரே கடவுள் இன்னின்ன இலட்சணமுடையவரென்றும், அவர் இன்ன நாமமுள்ளவரென்றுந் தெளிவாய் விளக்குகின்றது. ஸ்தப மதத்தாருக்கு வேதமிருந்தால் அத்தையே எல்லாரும் அறிந்து அதன்படி நடக்கக் கவலைப்படுவார்கள். அதில்லாமையினால் அவர்கள் மற்றவர்களுக்கொன்றிருந்தால் தங்களுக்கு நாலு வேதம் உண்டென்றும் அவைகளில் இருந்து ஆறுவித சாஸ்திரங்களும் பதினெண்விதபுராணங்களும் அறுபத்துநான்கு கலைக்கியானங்களுந் தொண்ணூற்றாறு தத்துவங்களும் இன்னும் பல விபரீதங்களுமுடைத்தனவென்றுசொல்லிக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து மதமோ பராபரன் மனிதருக்கு அருளிச்செய்த வேதமிதுவென்றும் அது இன்ன காரணத்துக்காக அளிக்கப்பட்டதென்றும் யாவருக்குந் தெளிவாய் உணர்த்துகின்றது. ஆதலால் விவேகிகளாயிருப்பவர்கள் ஓவ்விரண்டு மதங்களிலுமுள்ள காட்சிகளை அறிந்துணருமபோது ஸ்தப மதமானது பதரென்றுங் கிறிஸ்து மதமோ மணியென்று முணர்ந்துகொண்டு கிறிஸ்துவின் உத்தாரப்படி அதைப் பற்றிக்கொண்டு தங்கள் சுவர்காவென்னும் மோட்ச வீட்டை மண்ணின்மேலல்ல, கற்பாறையாகிய கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மேற் கட்டுகிறார்களென்று உறுதியாக அறிந்துகொள்வீர்களாக.

உமது உண்மைவிடைகாரன்

மன்மதபொடி மாமனுப்பொடி.

[Translation of the above.]

Thanks to the Editor.

MY DEAR STAR,

The average number of people in India, according to the computation of intelligent men, is 15,000,000, and their gods are 33 millions, and 5 principal gods exercise sway over these gods and men, and in fine, 3 gods govern all these 33 millions of gods, 15 millions of men, &c. But in opposition to this, sages and other intelligent men, who have examined the attributes of these gods, uniformly acknowledge that they are not *gods;* and that there is only one true and self-existent GOD, and that *we* cannot make any *idea* even of his name and attributes. In proof of this, it is said in Hinduism itself, that "there is only one God; there is only one Veda; there is only one Guru; there is only one heaven; and there is only one birth in the world," but not four Veda, six Shastras, 64 arts, 18 Puranas, and 96 qualities of things, and that those who acknowledge the existence of many gods will be subject to hell fire.

Hear! the Christian religion only shows, who is that GOD, and what are his attributes? and the Christian religion only sets forth the true Vedam, and the reason, for giving that Vedam.

In view of this, when an intelligent man contrasts Chrstianity with Hinduism, he knows very well that Hinduism is chaff, and Christianity is corn; and consequently the Christians build their houses on the rock, which is Jesus Christ.

Yours most obediently,

MANMATHAPODY MAMANAPODY.

உதயதாரகையின் எட்டிற்றர் துரையவர்களுக்குச் சிரஞ்சீவியுண்டாவதாக,

தங்கள் பத்திரிகை ஒன்றின் கண்ணே "கற்பனைகளரவம்" என்பதியாது என வண்ணநகர் மாணிக்கன் விளைய விளைவைக் குறித்த புலவர்கள் வாசிக்காமல் விட்டுவிட்டார்களோ? அல்லது வாசித்தும் விளங்காமல் விட்டுவிட்டார்களோ அல்லது கடதாசி பேனையில்லாமல் விட்டுவிட்டார்களோ? அல்லது சொல்விக்கொடுக்கிறுண்மைகொல்விக்கொடுக்கிறது எங்கள் வழப்பமல்ல. பொய்கொன்றுண்மைப்புலவர்கள் இலக்கணநூலாவிடிப்பார்களென்றெண்ணி விட்டுவிட்டார்களோ அல்லது கற்பனைகளரவம் விளக்கவில்லையோ? வேதகிரியோடிணங்கவில்லையோ? விளைவிய மாணாக்கனும் நித்திரையாயிப் போனாரோ அறிந்திலன் அவரெக்கேயெனத் தெரிந்திலன் ஏன் பேசாமலிருக்கிறாரோ பிரிந்திலன் இலக்கணத்தாசு இவர் நேசர்காட்டிய சொற்களில் விளங்கக்கூடாதவையெல்லாம் அடுத்தகளஞ்சியத்தில் விளங்கப்பண்ணிய சோடசாவதானிக்கு நிகரென்ன இவரெத்தனை சொல்லுக்கனை அறிவித்தார் எத்தனை இலக்கண நூல்களின்பெயரையும் அந்நூல்களின் பொழிப்பையுங் காட்டினார் களஞ்சியவழியாயெமக்கு நீட்டினார் ஆகையால் அவரைத்துதிக்கிறேம்மதிக்கிறேம், கற்பனைகளரவம் அறிந்த வரத்தைக் கட்டுப்பெட்டிக்குள்ளே வைக்கட்டும். "அச்சிரம்போடல், கற்பனைகளரவம்" என்றதற்கு மறுபேர் விடை எழுத மன்றாடுகிறேன்.

இப்படிக்கு,

கி. காசி.

சகுன விளக்கம்.

(Ominous occurrences.)

க. ஒரு நாயுனையிடக்கேட்கில் அதற்கு மூச்சுக்குடலும் உனக்குச் செவியும் உண்டென்றறியலாம்.

உ. பழங்கனி யெதிர்ப்பட்டால் தோட்டம் அறுக்கையாயிருக்குதென்றறியலாம்.

ங. தேவடியாளைக்கண்டால் இது கலியுகமென்றறியலாம்.

ச. பல்லி நிமித்தஞ் சொல்லக்கேட்டால் அது தின்கிறதற்குப் பூச்சி பிடிக்கவில்லையென்றறியலாம்.

ஞ. பண்டாரங்களுசாடக்கண்டால் சோம்பலும் எத்துங் குலையில்லையென்றறியலாம்.

சு. கூரையிலே நாயேறினால் வீட்டுத்தாழ்வாரம் எப்படியோ நிலத்துக்குக் கிட்டினதென்றறியலாம்.

எ. பஞ்சமியிலே பாம்பு வீட்டுக்குள்ளேவந்தால் பாம்பு கடக்க வேண்டிய இடத்தில் மறித்துக்கோள்ளவாலசந்திரனுக்குக் கவ்வையில்லையென்றறியலாம்.

அ. தேவர் கூத்தாடக் களுக்கண்டால் கட்டுக்கதைக்குங் களுவுக்குஞ் சமபந்தமுண்டென்றறியலாம்.

கூ. சாரை குறுக்கேபோனால் நீ பயந்து பின்னிட்டுப்போகாவிட்டால அது போனதற்குக் குறுக்காக நீயும் போவாயென்றறியலாம்.

ய. வீட்டிலே கூகையுறுமினால் அதற்கு மந்திரோசையல்லாமலித்தோசையல்க் கூவாதென்றும் உன்னுடையகோதிக்குஞ்சுகளில் இயாதொன்றை இருஞ்சிக்கொன்ன மனதாயிருக்குதென்றும் அறியலாம்.

ஙக. ஒரு அறுதலி எதிர்ப்பட்டால் நீ சாவுக்குரியவலகத்தில்ச் சீவிக்கிறுயென்றும் இந்தப் பயனற்ற சகுனங்களைக் கவனித்துக் காலத்தை வீணிற்போக்கப்படாதென்றும் அறியலாம்.

பஞ்ச தந்திரக் கதை.

மூன்றவது.

சந்திவிக்கிரகம்; அல்லது அடுத்துக்கெடுத்தல்.

PANCHA-TANTRA-KATEI.

The art of conquering an enemy by means of an affected friendship.

[Continued from page 272.]

ஒரு நாள் மயில் முதலாகிய பறவைகளெல்லாங் கூடியிருந்து நமக்கெல்லாங் கருடன் அரசனுயிருந்தும், நம்மைக் கொல்லுகிற வேடர்களினின்றும் நம்மைக் காப்பாற்றுமல் இதாகிதமுந் தெரியாமலிருக்கிறன். இத்தன்மையுடைய இறைவன் இருந்தும் பயனென்ன? ஆதலால் நமக்கரசனே வேண்டாமென்போமானால் மீகாமனில்லாக் கப்பல் கரைகாணுதது போல அரசனில்லாவிட்டால் நிலைகெட்டுப்போவோம், ஆகையால் எல்லாப் பறவைகட்கும் அரசனுகக் கோட்டானை நியமிக்கவேண்டுமென நிச்சயித்து இராசபட்டாபிஷேகத்துக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்துப் பின்பு பலவாச்சியங்களை முழக்கிக் கோட்டானைச் சிங்காசனத்தின்மேலுட்காருவிக்கவேண்டுமென்றிருக்கையில் ஒரு காகம் வந்து அவற்றைப் பார்த்து, இதென்ன காரியம்! இதென்ன காரியம்! என, அப்போது எல்லாப் பறவைகளும், பறவைகளில் வஞ்சகமுள்ளது காகமும், மனிதரில் நாவிதனும், விலங்குகளில் நரியும், மாதர்களிற் பணிப்பெண்ணுஞ் சதுரர்களாயிருக்கிறர்கள் ஆதலால், இச்செய்தியை இதற்குச் சொல்லி இதன் உடன்பாடுபெறவேண்டுமென்றுதீர்மானித்து அத்தைப் பார்த்து எங்களுக்கு அரசனில்லாமையால் இக்கூகையை அரசனுக்கிக் கோள்ளுகிறேம், இதற்கு நீயும் உடன்படென இதைக் கேட்டு அந்தக் காகங் குலுக்கை கைத்துச் சிரகம்பனம் பண்ணிச் சொல்லுகிறது, ஓ, ஓ! இது மூழுதுங் கெட்ட காரியம். ஏனென்றுல், அழகும் வல்லமையுமுண்டாய மயில் முதலாகிய அநேகம் பறவைகளிருக்கையில், இத்தப் பகற் குருடாகிய குரூபி அரசனுக்குத் தக்கவனே? குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளலாமா? தோலோ தோல்—இதற்கு நானுடன்படேன். கருடராசனிருக்கையில் மிகவும் பயங்கரபாபமும் வலியின்மையுமுள்ள இக்கூகையை அரசனுக்கி ஊங்கட்குப் பலனென்ன? ஒருவன் சுவாமியாயிருக்க வேறொருவன் குணசாலியாய் அகப்பட்டாலும் அவனுபயோகியாகான். பராக்கிரமமுங் குணமுமுள்ள அரசன் உலகத்திலொருவனே போதும். பலபேர் அரசர்களால் மனிதர்கள் துன்பமடைகிறர்கள். கருடன் பேரிலுலேயே எல்லா வரங்களும் பெற்று மனிதர்கள் நம்மிடத்தில் மதிப்புண்டாயிருக்கிறர்கள். வலியவர்களுடைய பேரிலே எளியவர்களுக்குக் காரியமாகின்றது. முன்னெருமுயல் சந்திரவிம்பத்தைக் காட்டிச் சுகமடைந்ததை அறியீரகளர்வென, அதைக் கேட்ட பறவைகள் முயல் எப்படிச் சுகமடைந்தது, அண்ணை, சொல்லவேண்டுமெனக் காகஞ் சொல்லலுற்றது.

ஒரு காட்டில் சதுரதந்தனென்னும் அரசயானை பல யானைகளோடு கூடிக்கொண்டிருக்கும்போது அங்கே மழை பெய்யாமையால் ஆறு, ஏரி, குளம், குட்டை, கயங்களெல்லாம் வற்றிப்போக அப்போது யானைகளெல்லாந் தாகித்துச் சதுரதந்தனைப்பார்த்துச் சுவாமி, நாங்களெல்லாந் தாகத்தின் பொருட்டுச் செத்தாற் போலாமென்ம். சிலர் தண்ணீர்காக்காச் செத்தார்கள். ஆகையால் மிகவுந் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானுல் எல்லாருஞ் சுகமடைவோமென,இவற்றின் பேச்சைக் கேட்டுத் தன் மனதில் யோசித்து, இதற்கு ஐந்து காட் பிரயாண தூரத்தில் ஒரு பெரிய மடு பாதாள கங்கையினுல் நிறைந்திருக்கின்றது. அங்கே போனுல் எல்லோர்க்கு மிகவுந் தண்ணீர் கிடைக்குமென்றிப்படியு தரிசெய்துகொண்டு அப்படியே அங்கேபோய்த் தெளிந்த நீரைக்கண்டு அந்நிலவரைக்குஞ் சலக்கிரீடை செய்துகொண்டிருந்து கரையில் வந்திருந்தன. அப்போது அங்கே வாசம்பண்ணிக்கொண்டிருந்த வெகு முசல்களிற்சில, யானைகளின் காலின் கிழ்ப்பட்டிறந்தன, சில சில முயல்களுக்குக் கால் கைகளொடிந்தன, சிலவற்றிற்குக் குடல்களுளறுங்கின, சிலவற்றிற்குக் குடல்கள் சரிந்தன, சில சில விர்த்தத்தானிறைந்தன. இப்படிப் பொல்லாங்கு நேரிட்டவுடனே சில முயல்களொன்றுய்க் கூடி இன்றைக்கு யானைக் கூட்டம் வந்து நம்மை அழித்தது; இப்படியே தினமிருக்கும். ஏனெனில் இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை, இதனுலே நமக்கு மீனரசர் சங்கடம் நேரிட்டது.

[இன்னும் வரும்]

ரு. அதிகாரம்.

இல்வாழ்க்கை—*The domestic state.*

நுல். வையத்துவாழ்வாங்கு வாழ்பவன்வானுறை
யுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.

பு. இல்லறத்தோடு கூடிவாழவேண்டியபடிவைத்து உலகத்தில் வாழ்கிறவன் இந்த உலகத்தான். ஆனலும் வானுலகத்திலே வாசம்பண்ணுகின்ற தேவருள் ஒருவனுக வைத்து மதிக்கப்படுவான்.

He who on earth has lived in the conjugal state as he should live will be placed among the gods who dwell in heaven. *Drew.*

Who in domestic joy thus lives on earth
May with the gods, heaven's denizens, be ranked.
Ellis.

கூ. அதிகாரம்.

வாழ்க்கைத் துணை நலம்.

நுக. மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்
டான்
வளத்தக்காள்வாழ்க்கைத்துணை.

பு. மனையறத்துக்குத்தக்க (நற்குணம் நற்செயல்களாகிய) சிறப்புடையவளாகி, தன்னை (விவாகஞ்செய்து) கொண்டவனுடைய வரவுக்குத்தக்கபடி சமுசாரஞ் செய்யவல்லவள் அந்த இல்வாழ்க்கைக்குத் துணையாம்.

She who has the excellence of home virtues, and can prudently expend the property of her husband, is a help in the domestic state. *Drew.*

To every household duty fitly trained,
The wife should to her husband be in all
A help-mate meet. *Ellis.*

நுஉ. மனை மாட்சியில்லாள்கணில்லாயின் வாழ்க்
கை
யெனைமாட்சித்தாயினுமில்.

பு. மனையறத்துக்குத்தக்க (நற்குண நற்செய்கைகளாகிய) சிறப்பு, (ஒருவனுடைய) மனைவியிடத்தில் இல்லையானுல், (அந்த) இல்வாழ்க்கையானது (செல்வத்தினுலே) எவ்வளவு சிறப்புடையதானுலுஞ் (சிறப்பு) இல்லை.

If the wife be without domestic excellence, whatever (other) greatness (be possessed) in the conjugal state, it is nothing. *Drew.*

The wife maintains the glory of the house;
All other glory, if she fail in this,
As if it were not, is. *Ellis.*

SUPPLEMENT TO THE உதயதாரகை.—MORNING STAR.

உ. புத். சதசிகை. உச.] தஆசஉ ஹஇ. மார்கழி. ஙடு, தேயதி வியாழக்கிழமை, Thursday, December 15, 1842. [Vol. II. No. 24.

GARDENER'S CALENDAR.

General Remarks.

Madras.

Winter and dress figs, mulberries, and custard apples. Dress pines in September and remove the suckers, and dress again with stable manure, red earth, and sand in January. Sprouts of cabbages, cauliflower, brocoli, and knol kole, taken in February, March, and April, and even in May afford a good vegetable during the hot season.

Plantains, pine apples, and figs may be watered in the mornings, but every thing else in the evening only. The seed peas that answer best for Madras are those from Bangalore,—the common white pea of Mysore. The best carrot, turnip, and onion seed from Hyderabad, knol kole, from the Cape, and cabbage, cauliflower, beet, and celery, from seeds from Bangalore and the Neilgherries.

Good manure for all sorts of flowers is red earth and sheep's dung, in nearly equal quantities.

Hints on the Theory and Practice of Gardening.

(Concluded from page 273.)

On the saving of Seed and acclimating Plants.—We mentioned above that some kinds of seeds, saved in this country, give more certain and better crops than that brought from Europe, even though the latter is ascertained to be of good quality, by the freedom with which it vegetated. This fact renders it desirable that attempts should unceasingly be made to procure Indian raised seed for use in India, as success in this operation holds out the only prospect of obtaining the long sought desideratum —constant supplies of good table vegetables. We also mentioned that to make plants flower and produce fruit it is requisite to store their systems with well digested nutritious juices: to effect this, we must reduce their luxuriance by stinting their supplies of water, and giving them a poorer soil to grow in.

Any attempts to procure seed from European plants in this country must be conducted on these principles, and with much care, as we have an almost, if not actually, insurmountable barrier, to overcome in the heat of the climate, which though it may not be such as to prevent the plant arriving at perfection as a succulent vegetable, yet may altogether prevent its showing flower or maturing fruit. Such has hitherto been the case with our knol koles, cabbages, cauliflowers, celery, &c. though all seed freely on the Neilgherries. Not so however at Bangalore, the mean temperature of which is much below that of Madras. The failure at Bangalore is probably owing to imperfect management, and may ultimately be overcome, but until success has crowned their efforts, and we are enabled to work with seed raised in that comparatively warm climate, we can scarcely hope for success in the Carnatic, though that ought not to be a bar to our trying. With this view, we would recommend, as the most probable method of attaining success that some of the best cabbages, knol koles, &c. be transplanted into pots filled with soil composed of two parts sand, one part red loam, and one part vegetable mould, and for some time watered with liquid manure, prepared by steeping dung in water, until they have recovered from the operation of transplanting. These should then be allowed to rest through the hot season; merely giving water enough to keep them alive until October. They might then be planted out and liberally watered for a few times with liquid manure, until they show signs of throwing up a flower stalk, when their supplies ought to be diminished, themselves protected from the monsoon rains, and the seed ripened in the course of the cool season. It seems probable that many failures, even in Bangalore must be submitted to, before we obtain good seed, but the object is well worth the trouble, and it seems even probable that if we bring the subject to the notice of European gardeners they could lend us very important assistance by obtaining seed from the warmer countries of Europe, and growing a few plants raised from them in their hot houses, until they have ascertained that under the skilful management of the English gardener these plants can be made to produce seed in a tropical temperature, when we, whatever might have been the amount of previous discouragement, would probably resume our experiments with renewed energy, determined to succeed as well as they.

Here we bring our hints to a close: not however without expressing the hope that they may prove useful to a few at least of our readers, and that some of these may be induced to favour us with communications, explanatory of the results of their experiments, the better to enable us to correct, in future editions, many errors into which we may have fallen in this.

Before finally concluding we think it necessary to state that nearly the whole matter of these hints is derived from the work several times referred to in the course of them; namely, "*Lindley's Theory* of *Horticulture*," the object of which is to explain on physiological principles the principal operations of gardening,—a work of sterling merit, and as being the only one in which a lucid explanation of the principles of gardening is to be found, one, which we would strongly recommend to the especial attention of all those desirous of becoming acquainted with the *Philosophy* of *Horticulture*, unencumbered with the verbose details of practice, too often erroneous, which constitute the bulk of most of the existing works on gardening.

For those desirous of obtaining practical details, applicable to Indian Horticulture we would *strongly* recommend Mr. Speed's *Hand Book* of *Gardening*, published in Calcutta.

To our Readers.

The present number closes the second volume of the "*Morning Star.*" Its brief existence has been attended by circumstances of both an encouraging and discouraging kind, which is, we suppose, the usual experience of every such undertaking.

We are not insensible to the deficiences that have marked its course, nor of the labour and time that are requisite for the proper conduct of such a publication. Our readers will doubtless have a clearer sense of the former than of the latter, but we hope they will give us credit for an honest desire to promote their benefit without regard to private or sectarian interests. This has certainly been our aim. Every one must be sensible, on consideration, that it is not an easy matter to cater for hundreds of differing tastes so as to please them all.

The immediate objects aimed at in the establishment of the paper were, to diffuse useful information, to encourage a taste for reading, and to excite thought and inquiry in the mind of the native community; and these objects, we have reason to believe, have been secured to as great an extent as could reasonably have been expected. The publication of the paper has hitherto been attended with some pecuniary loss, which, we hope will, in future, be lessened and finally removed by an increase of subscribers. As it is the *first*, and—now that the "*Rising Sun*" is discontinued,—the *only* paper established in the island for the benefit of the Tamil community, and as it is published at an extremely low rate in order to secure an extensive circulation, we hope those who have derived pleasure and profit from the past perusal of its pages will feel an interest to persuade their friends to become subscribers, that the benefits it is calculated to produce may be more widely extended. We are certain, that such an amount and variety of entertaining and useful articles for reading and study as have been published in our columns are not to be obtained in so small a compass elsewhere in the Tamil language, and we do not see how any native who has a regard for the public benefit, or even a desire for self-improvement, can withhold his interest and support from the undertak-

ing. The mind needs its appropriate food as well as the body; and shall those things which perish with the using be allowed to engross the whole time and attention, and the immortal mind be left without culture? Shall we neglect the *pearl* and bestow our whole care on the *shell* that encloses it? None but a fool will do this. But it is greater folly to keep the mind in ignorance under the pretence of a necessity for providing for the clay tenement which it inhabits. As the *only* object had in view in the continuance of the *Morning Star* is the intellectual and moral improvement of the native community and as pecuniary sacrifies are made for its continuance,we feel at liberty to urge upon our readers the importance of each one's exerting himself to give a more general effect to its object by procuring new subscribers, and by reading it in families and circles where he is accustomed to visit.

We offer our sincere thanks to the correspondents and agents of the paper, whose valuable assistance has contributed to our encouragement, and to the entertainment and profit of our readers. The continued prosperity and usefulness of the "*Morning Star*" will depend much on the continuance of their zealous exertions in its behalf.

We have hopes that the arrangements made for the next year will give increased value to the paper in the public estimation.

A prospectus of Vol. III. in connection with a title page and index for the present volume, will be issued next week, to which we must refer our readers for the exposition of our future plans.

To our Subscribers and Agents.

From some of the Agents of the "*Morning Star*" we have received complaints of the trouble and losses they experience by the neglect of their subscribers to pay the amount due on their subscription. We are sorry that there should be occasion for such complaints, and would hope that it is more the result of a careless and forgetful habit, than of a disposition to be dishonest. We take the liberty to expostulate with such persons on the injustice and impropriety of their conduct. A due regard for one's own character, and a consideration of the advantages derived from having an agency for distributing the paper, would lead a person, we should think, to feel it an obligation and privilege to be punctual in his payments. The paper when not received through an agent is chargeable with a subscription price of 4 *shillings per year*, but when 20 or more copies are taken together it is only 2 *shillings*. We believe most of our agents furnish their subscribers with the paper at this reduced price, and thus encounter all the trouble and expence of distributing it and of collecting the subscriptions without any other reward than the satisfaction of feeling that they have aided in disseminating light and knowledge amongst their countrymen. We do not wonder that they should feel discouraged when in addition to this, they are obliged to advance their own money to meet their engagements with the publisher. The conduct of persons who wilfully expose the agents to such inconvenience and loss—while they are dependent on them for the moderate terms on which they receive the paper, shows a selfish and ignoble spirit, and is unworthy of one who aspires at enjoying the esteem and confidence of his fellowmen. We would advise such persons to make the best atonement in their power for their delinquencies, by paying up their arrears without delay, and that they henceforth remove all such cause of complaint and earn for themselves a good name, by being regular and punctual in their payments, and by co-operating with our agents in their efforts to promote the well-being of the paper.

உதயதாரகைப் பத்திரங்களை வாசிப்பவர்களுக்குப் பத்திராதிபதியவர்கள் எழுதிக்கொள்ளுகிறதென்னவானால்,

இச்சஞ்சிகையோடே உதயதாரகையின் இரண்டாம் புஸ்தகம் முடிந்தது. அத்தை முழுவதும் எடுத்துச் சருக்கமாய்ப் பார்த்தால், அதிலே தயிரியங்கொள்ளத்தக்க அநேக காரியங்களும் தயிரியவீனப்படத்தக்க காரியங்களுஞ் சம்பவித்திருந்தாலும் அப்படிச் சம்பவிப்பது ஈமுத்தேகிக்கிறபடி இவ்வகைப்பட்ட ஒவ்வொரு கையிட்டுக்கொள்ளுதலுக்கும் பெரும்பாலும் சுபாபமாய் உண்டுபடவேண்டிய காரியத்தானென்றறியவேண்டியது. அப்படிப்போயினும் அதிற் கண்ட குறைவுகளையும், இப்படிப்பட்ட ஓர் பத்திரிகையை முறைமையாம்படி பராபரித்துவரவேண்டியதற்கவசியமாயிருக்கப்பட்ட நேரத்தையும் வேலைமுயற்சியையும் பற்றி நாம் உய்த்துணராதவர்களாயிருக்கவில்லை. ஆகையால் இத்தை வாசிக்கிறவர்கள் இதிற் கண்ட குறைவுகளை நீக்கி அத்தை நிறைவாகத் தாக்கி அதற்கு வேண்டிய நேரத்தையும் வேலை முயற்சியையும் பற்றி ஒரு நற் கருத்தைச் சந்தேகமில்லாமற் கொண்டிருப்பார்களென்று தோன்றுகிறபடியால் அவர்கள் தந்தமக்குரித்தான அல்லது தத்தம கோட்பாட்டுக்குத் தகுந்த பலாபன்களை மாத்திரம் நாடித்தேடாமற் பொதுவாகச் சகலருக்கும் உபயோக நன்மைகளை அதிகரிக்கப்பண்ணுகிறதற்கு நற் சிந்தை நன் முயற்சியைக்கொண்டிருப்பார்களென நாம் நம்பியிருக்கிறோம். சந்தேக விடரீதமில்லாமல் எமது நோக்கமுங் கருத்துமிதுவே. ஆனாலும் பற்பல பதார்த்தங்களிற் சுவைகொண்டிருக்கிற அநேகமாயிரம் பேரை ஒரே காரியத்திற் சுவைகொள்ளப்பண்ணுகிறது கூடாத காரியமென்று நீவிரனைவரும் உய்த்துணர்ந்து யோகிக்கவேண்டியது.

நாங்கள் இந்த உதயதாரகைப் பத்திரத்தை அச்சடித்துப் பரப்பிவருஞ் செய்கை நோக்கமென்னவென்றால், நற்போதனைகளைப் பரப்புகிறதற்கும் வாசனையின் சுவையை எங்குந் தைக்கப்பண்ணுகிறதற்கும், இத்தேசத்தவர்களுடைய மனதிலே நல்லெண்ணமும் விசாரணையும் உண்டுபடும்படிக்கேயல்லாமல் மற்றும்படியல்ல இவ்விதநோக்கங்களை நாங்கள் கொஞ்சத்துக்குக் கொஞ்சஞ் சரிக்கட்டிக்கொண்டோமென நம்புகிறதற்குப் போதிய நியாயமுண்டு. நாங்கள் இந்தளவுக்கும் இப்பத்திரத்தை அச்சடித்துப் பரப்பினதிலே சற்றே பணநட்டமுண்டுபட்டாலும் அது இனிமேல் வரவரக் குறைந்து கடைசியாகக்கையொப்பக்காரர் மிகுதியாவதினாலே அது சற்றென்கிலுந் தலைகாட்டாமலற்றுப் பறந்தோடிப்போமென்று நாங்கள் நம்பி ஆசித்திருக்கிறோம்.

தென்பாலுதித்த உதயாதித்தனும் மங்கித் தொங்கிப் பட்டுப்போனபடியால், எங்களும் பரம்பும்படிக்கு மிகுதியுஞ் சொற்பவியயாய்த் தாரகை மாத்திரமே தமிழ்ச் சனங்களுடைய நன்மை விருத்திக்காக இலங்கைத் தீவிலிப்பொழுது பிரகாஞ்செய்யப்பட்டொளியைப் பரப்பி வருகிறபடியினாலும், மூன்னே தாரகைப் பத்திரங்களை வாசித்ததினால இன்பத்தையும் பலாபலன்களையும் அடைந்தவர்கள் தங்கள் கிடேகிதரையும் இனிமேல் இப்பத்திரிகைக்குக் கையொப்பகாரராக்கி அதினால வரும் பயனை எங்களும் அதிகமாய்ப் பரப்பிவிட வழிபார்ப்பார்களென்றும் நம்பி ஆசித்துயோகித்திருக்கிறோம். இன்னும் நாங்கள் தாரகை வழியாய்ப் பிரகாசஞ்செய்திருக்கிற மாதிரி வேறெங்களுந் தமிழ்ப்பாடையிலிப்படிப்பட்ட பலவகைக் கூட்டமான உபயோகமுள்ள போதனைகளையும் பொழுதுபோக்குக்குத்தகுதியானதங்களையுந்தேடியாதொருவரும் அடையமாட்டார்களென்பது சத்தியம். ஆகிலும் ஊர் நன்மையை விரும்பியிராதவனும் அல்லது தான் யாதொன்றிற்றேர்ச்சியடையும்படி விரும்பவழிபாராதவனும் எவ்விதமாய் இப்படிப்பட்ட முயற்சியை விட்டுவிலகித் தன்னயத்துக்கிரண்டகமாயொருவன் இருப்பானேயென்பதை அறிந்திலோம். உடம்புக்கு ஊண்வேண்டியதுபோல அப்படியே உள்ளத்துக்கு ஊதியம்

வேண்டியிருக்கின்றது. குறைந்து அழிந்துபோகிறவைகள் எங்களுடைய முழு நேரத்தையுஞ் சிந்தனைகளையுஞ் சிறிதுவில்லாமல் ஒருமிக்கப் பிடித்துக்கொள்ள விடுவோமோ? முத்தை வேண்டாமென்னத்தள்ளி அத்தைமூடியிருக்கும் அழுக்குப்பிடித்த ஓட்டுக்காக எங்களுடைய முழுப்பொறுப்பையுஞ் செலுத்தி விடுவோமோ?

ஒரு மூடனிப்படிச்செய்வானேயல்லாமற் புத்திக்காரனிப்படிச் செய்யமாட்டான். மண்ணுக்குப்போற உடலுக்கு வேண்டிவருந்தவேண்டுமென்ற சாட்டைப்பிடித்துக்கொண்டு மனத்தை அஞ்ஞானமென்னுங் திமிர்ப்படலத்திற் போக்கடிக்கிறது எவ்வளவு மதிக்குறைவென்பதைப் பாருங்கள். உதயதாரகையை நாங்கள் நிறுத்திவிடாமல் அத்தைமென்மேலும் அச்சடித்துப் பயிரங்களுஞ்செய்யவேண்டுமென்ற நோக்கமென்னத்துக்கென்றால், இவ்வூரவர்களுடைய மனக்கருவியின் தேர்ச்சிக்கும், நல்லினையின் வளர்ச்சிக்கு மேயல்லாமல் மற்றும்படியல்ல. ஆகையினால், இத்தை வாசிக்கிறவர்களொவ்வொருத்தரும் தன்னுற் கூடியளவு புதுக்கையொப்பக்காரரை அதிகமதிகமாகச் சேர்ப்பதினாலும், தாரகைப்பத்திரங்களைத் தாங்கள் பழக்கமாயிருக்குஞ் சமுசாரங்களிலும் மற்றும் குடும்பங்களிலும் வாசித்துக்காட்டுவதினாலும் நாங்கள் கொண்ட நோக்கத்தின் பெறுபேறுகளை அதிகரிக்கப் பண்ணுவார்களென்று காத்திருக்கிறோம்.

தாரகைக்குக் கடிதங்களை எழுதிவரவிடுத்தவர்களும் அதற்குக் காரியக்காரராயிருந்தவர்களும், தாரகையைவாசித்தவர்களைத்தூண்டியப்படுத்தவும், பொழுதுபோக்கலையும் பலாபலன்களையுமளிக்கவுமேதுப்பண்ணி ஒத்தாசைசெய்ததற்காக அவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியறிந்தவர்களாயிருக்கிறோம். இனிமேல் உதயதாரகையின்விருத்தியும், அதினால் வருமபயோகமும் அவர்களுடைய நன்மையற்கியினிலையிலே தானே தங்கியிருக்கின்றது. தாரகையைப்பற்றி நாங்கள் மற்றவருடத்துக்குப் பண்ணியிருக்குமொழுங்குசட்டத்தைப் பார்த்தால், அது சனங்களுடைய அறிவுத்தேற்றத்தையும் தாரகைக்கதிகப்பாடானமென்மையையுங்கொடுக்கிறதற்கு ஏதுவாயிருக்குமென்று நம்பிக்காத்திருக்கிறோம். இரண்டாம் புத்தகத்துக்கு முதலிற் சேர்க்கவேண்டியபுறமும், அட்டவணையும், மூன்றும் புத்தகத்தைப் பற்றிய ஒழுங்குத்திட்டமும் இதனடுத்த கிழமையிற் பிரசுரஞ்செய்யப்படும், அதில் நாங்களினமேற் செய்யவிருக்குமெண்ணங்களுங் கருத்தும் நோக்கங்களுமின்னின்னவையென்று தாலாம்பரமாய் விளங்கும்.

உதயதாரகைக்குக் கையொப்பக்காரருக்குங் காரியக்காரருக்கும் பத்திராதிபதியவர்கள் எழுதிக்கொள்ளுவதென்னவென்றால்,

தாரகைக்குக் கையொப்பக்காரராயிருக்கிறவர்கள் முறைமையாம்படி தவணைபோலத் தங்கள் பணத்தைச் செலுத்திவராததினால், காரியக்காரராகிய தங்களிற் சிலர் நட்டத்திற்கும் தொந்தரைக்கும் ஏதுவாயிருக்கிறார்களென்று குறையாய் எழுதிவரக்காட்டியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் குறையாய்ப் பேச இடம்வந்ததற்காக நாங்கள் மிகவுந் துக்கிக்கிறோம். அப்படி வந்ததுகையொப்பகாரர் பராமுகமாய் மறந்துபோனதேயல்லாமற் கொடுக்கிறதினாலே நாணயத்தப்புள்ளவர்களானதினால் இப்படிச் சம்பவித்ததென்று நாங்கள் நினைக்கவில்லை. ஆகையால் இப்படிப்பட்டவர்களுடைய நடையைப் பற்றிச்சில காரியம் பேசவேண்டியிருக்குது. என்னவெனில், ஒருவன் தனது சுய தராதலத்தையும், காரியக்காரர் வழியாகப் பத்திரங்களை வாங்குவதினால் வரப்பட்ட நயத்தையுஞ் சுகத்தையுஞ் யோசித்துப்பாராத்தானேயாகில், நாங்கள் நினைக்கிறபடி அவன் தான் இறுக்கவேண்டிய பணங்களைச் செலுத்துவதினால் மெத்தச் சாக்கிரதையாயிருப்பது தன்னுடைய கடமையென்றும் பெறுபேறென்றும் உணருவானென்பதற்குச் சற்றென்கிலுஞ் சந்தேகமில்லை. நீங்களனைவரும் அறிகிறபடி தாரகைப் பிரதிகளைக் காரியக்காரர் வழியாய் வாங்காமலத் தனியவாங்குகிறவர்கள் ஒரு வருடத்துக்கு (ச) சிலீங்கு அல்லது (ரூ) பணமிறுக்கவேண்டியது. அல்லது ஒரே குறுக்காய் (உ) அல்லது இருபதுக்கதிகமான பிரதிகளை வாங்கும்போது ஒரு வருடத்துக்குமேற் சொன்ன தொகைப் பணத்தின் அரைவாகியாகிய (உ) சிலீங்கு அல்லது (ரூ) பணமிறுக்கவேண்டியது. ஆகையால், இத்தக் குறைந்த பணவிலக்கணக்காய்க் காரியக்காரர் தங்களுடங்கள் கையொப்பகாரருக்குப் பிரதிகளைப் பகிர்ந்துகொடுத்து தங்கள் ஊரவர்களுக்கு வெளிச்சத்தையும் அறிவையும் பரப்புகிறதற்கு உபகாரிகளாஞ்மென்ற அந்த மனத்திருத்தியேயல்லாமல் மற்றும்படி வேறொரு பலனையுந் நாடித் தேடி அடைய வழிபாராமற் குறைந்த விலக்கணக்காய்ப் பிரதிகளைக் கொடுத்துப் பணத்தையுஞ் சேர்த்து வரப்பட்ட தொந்தரையெல்லாவற்றிலும் இருந்து விலகிக்கொள்வார்களென்று ஆசித்து நம்பியிருக்கிறோம்.

தாரகையைப் பிரசுரஞ்செய்கிறவருடனே கணக்கை பொதுத்தீர்க்கொள்ளுகிறதற்குக் காரியகாரர் தங்கள் சொந்தப் பணத்தை முன்னிதாகப் பிரசித்தகாரனுக்கனுப்பும்பொழுது சற்றே மனக்குறைப்படுவார்களென்பதை அறிகிறது நமக்காச்சரியமல்ல. இப்படியெல்லாஞ் சொற்பலிலைகொடுத்துஞ் செய்ய வேண்டுமென்னெண்ணித் தங்கள் காரியக்காரரை நட்டத்துக்கும் தொந்தரவுக்கும் ஏற்படுத்துகிறவர்கள் ஏளமையானவுந் தற்பிரியமானவுங்குணத்தையுடைத்தானவர்களென்றும், தங்களுடனெத்த சனத்தின்மேற் கொள்ளும் நம்பிக்கையையும் அவர்களுக்குக் காட்டும் மதிப்பையும் விரும்புகிறவொருவனேப்போலேயு மிருக்கமாட்டான்.

காலதாமதமில்லாமல் அவரவர் கொடுக்கவேண்டிய நிலுவைப்பணத்தைக் கொடுப்பதினாலே தங்கள் குறையைச் சரிக்கட்டவும் இதுமுதற்றொடுத்து இப்படிப்பட்டகுறைவுக் கிடம்வைக்காமலிருக்கிறதுமன்றித் தாங்களிறுக்கும் பணத்திலே ஒழுங்குள்ளவர்களாகவும், திருவாகமுள்ளவர்களாகவுமிருக்கிறோமென்ற ஒரு நற்பேரைத் தரித்துக்கொண்டு தாரகையின் நன்மைவிருத்தியை அதிகப்படுத்துகிறதில்த் தங்கள் காரியகாரருடனெத்திசைந்து அவர்களுக்குதவிபுரியும்படி அனைவருக்கும் புத்திசொல்லி முடிக்கிறோம்.

பதின சங்கதிகள்.

யாழ்ப்பாணம்.

குடிவாழ்க்கைச் சங்கதி.—யாழ்ப்பாணத்துக்குச் சேர்ந்த ஊர்காவற்றுறைக் கோவிற்பற்றுக்கு நீதவானுயிருந்த மகா கனம் பொருந்திய நீ நீ. யான்றேட்டறிக்கோ முத்தையாத் துரையவர்கள் இந்த மீ. ஜிலை. திங்கட்கிழமை காலமே பரலோகவாசியானதென்பதை நாம் கேள்வியுற்றபடியால் அதற்காக நாங்கள் மெத்தத் துக்கப்படுகிறோம். காமெங்கே பார்த்தாலும் அழிந்துபோகிற செல்வத்தினால் மனிதனுக்கு நானுவிதமான மேலேசம். அதை விட்டு நீங்குவதே அவனுக்குச் சுகம். ஆனால் நிலைபெற்ற செல்வமேதோ அதே அரிய செல்வம். ஆகையால் ஆண்டவனே அனுதினமுமித்துத் துதித்துப் பதித்து வியந்து நயந்து பயந்து ஆசித்து நேசித்துப் பூசித்துப் போற்ற வழி பார்ப்போமாக.

கோழம்பு.

கண்டிக்குப் போகிற தபால்க் குவாரிவண்டில் தலேழோய் விழுந்து முறிந்ததினால் அதிலிருந்த ஆட்களிரண்டு பேருங் குதித்துக் காயமின்றித் தப்பிக்கொண்டாலும் இழுத்துப்போன குதிரையுஞ் செத்துப்போயிற்று. வண்டியும் பாடாய்த் தெறித்துப் போயிற்று.

கொலைபுரிய எண்ணினதி.—(கூமம்) பதாதிப்படைப்பட்டாளத்திலுள்ள நேவர் என்பவன் காவல்காக்கும் அறையிற் கட்டிலிற் படுத்திருந்த கொப்போறியல் கூப்பர் என்பவரைச் சுட்டபொழுது துவக்குக் குண்டு அவருடைய தலைகுட் கொஞ்ச அங்குலத்துக் கூடுருவிப் பறந்து சுவரிலேயும் பிடித்தது, ஒரு நியாயமில்லாமல் இவரைச் சுட்டானென்று காண்கின்றது.

சென்னபட்டினம்.

மழைத்தாழ்ச்சி.—பிறகிட்ட ஐப்பசி மீ. உதீ. மழை பெய்யாததினாலே இந்த இராசதானியிலுள்ள அரிசி வர்த்தகரெல்லாரும் திரண்டுகூடி அரிசியைக் குறைக்கவும் அரிசி அழக்கும் மரக்கால்லே பணத்தை அளக்கவும் மிகுந்த ஆசைகொண்டிருந்தார்கள். ஆயினுந்தேதி மழை பொய்த்தாலுங் கடவுள் கால மழையைக் கட்டளையிட்டமையால் ஐப்பசி மாதம் முழுவதிலும் விடாமழை பெய்ததுமன்றிக் கார்த்திகை மாதத்திலே தேதி மழையுங் காலமழையும் பெய்துகொண்டுவருகிறபடியால் தானியதவசங்களுக்கு ஒரு குறைவுமிராது. ஆகையால் மழை பெய்கிறதுங் காற்றடிக்கிறதும வெய்யிலெறிக்கிறதுங் கடவுளினதுசித்தமாகையால் மனிதருடைய எண்ணத்தின்படி ஒன்றும் நடக்கிறதில்லையென்று யாவருங் கெட்டியாய் அறிந்துகொள்ளவேண்டியது.

உவாந்திப் பிராந்தி.—சென்னைக்கரியிலுள்ள பறைய குலத்தவர் களுக்குள்ளே கோதாரி வியாதி கடுமையாய் உலாவிப் பதினேழு பேரையுமெடுத்துக்கொண்டு போயிற்றென்று கேள்வியாதலும்.

கொலை.—சூக்கினி நகரிற் போரிலே ஏற்பட்டிருந்தவர்களில் ஒருவனுகிய பாடல்கான்சுபதாரென்றவன் பண்ணின சில அடாத்துக்காகச் சுட்டுக்கொல்லப்படும்படி தீர்க்கப்பட்டான்.

லிவ்வபூல்—இங்கிலாந்து.

தீப்பற்றல்.—இந்த ஊரிலே தீப்பற்றினதினாலே கிட்டத்தட்ட (எ இல) பவுண் அளவுக்குச் சேதமாய்ப்போயிற்று.

SUMMARY OF NEWS.

JAFFNA.

Obituary.—Died at Jaffna, on Monday, the 5th instant, John Rodrigo Mootiah, Esq. *District Judge of the Islands*, deeply and sincerely regretted by his relatives.—The deceased has left a large estate which will be inherited by his wife and two daughters who survive him. Mr. Burleigh acts as District Judge of the Islands for the present.—*Communicated.*

Communicated by Mr. S. Tampiahpully.

DIED, on the 10th. Nov. 1842, at Chilaw, of a sudden sickness Mr. FREDRIC MAGNES HERFT, late proctor of Provincial Court of Jaffna and of the District Court of Manaar, leaving behind him a widow and 9 children (2 of them married) in an indigent state, as well as numerous relatives and friends to mourn his loss. He died in full confidence in his God, and breathed his last saying "Amen Lord Amen."

It is well known to all that death is sure, but alas! none are prepared for it nor afraid of it, while it is day; but when at the point of death, filled with fear and horror, they tremble and give up the ghost crying "alas! alas! I have spent my life in vanity and sin, and am now going to eternal hell-fire."

The greatness and riches of this world which we acquire with much trouble and pains make us afraid of death,—but those only who renounce the love of worldly things, and fear God, and follow his ways, will meet death with peace, and enjoy unspeakable and eternal bliss in Heaven.

Died at Manaar.—On the evening of the 5th December 1842, the wife of Mr. Abraham Evert Bartholomuesz, late *Head Clerk* of the Manaar Cutcherry, leaving a disconsolate husband, seven sons, and a circle of relations and friends to bemoan her irretrievable loss.

The Rising Sun.—This paper which was commenced a little more than a year ago, under very favourable auspices, has been discontinued, in consequence of insufficient support—or as stated by the editor, because it has "plenty of subscribers who do not pay." We are sorry that the *Sun*, whose brightness at one time, threatened to obscure the rays of our little *Star*, should so soon have set in darkness. We hope the Star may have a happier issue, and be continued to shed its humble light till the morning of redemption for the sons of India shall be fully proclaimed.

COLOMBO.

Abridged from the Observer.

Mail-coach Accident.—The Kandy mail coach fell down a precipice near Ambepusse on the 30th ult. Two passengers who were in it, escaped unhurt by jumping out, but the coachman was seriously injured, one horse killed, and the carriage much broken.

Attempt at murder.—Private J. Naylor of the 90th Light Infantry, whilst on sentry at the sally-port, fired his musket at corporal Cooper. who was lying on a cot in the guard-room. The ball passed within a few inches of his head and sank into the wall. No reason is assigned by him for this murderous attempt.

Drowning by Intoxication.—Three sailors of the *Elizabeth Walker*, in the Colombo roads, went in the sea outside the North Barrier gate, to bathe, when one of them, a young man of fine promise, who was intoxicated, was drowned.

MADRAS.

Ecclesiastical.—The Lord Bishop of Calcutta arrived at Madras on the 23d Nov. He was expected to remain about three weeks, and then proceed to England, overland, *via* Trichinopoly and Colombo. Bishop Spencer of Madras was to accompany his lordship to Colombo.

Cholera.—This dreadful disease is said to be raging among the pariahs at Madras—seventeen persons having died of it when the account was given.

Fraud.—A concopillay of the Commissariat Department and another native public servant at Madras have been accused of embezzling one half of the oil given for the public lights, and of selling the same for their mutual profit. The matter is now undergoing judicial investigation.

Court Martial.—Subadar Badul Khan, of the 27th Regiment of Native Infantry having been tried by a Court Martial and found guilty of deserting to the enemy while engaged in an action in the town of Ghuznee, has been sentenced to be shot to death by musquetry.

Execution for Murder.—A correspondent under date of Nov. 15, states that a man was lately executed at Trichinopoly for the murder of his wife, whom he had stabbed in a fit of jealousy.

Suicide.—A private of the 50th regiment stationed at Berhampore, having committed theft and fearing detection, hung himself.

Steam communication between Calcutta and the Straits.—An iron steamer of 150 tons with accommodations for 16 passengers has been ordered, to run between Calcutta and the Straits.

Removal of Jews to Jerusalem.—Several thousands of Polish and Russian Jews, at Berlin and elsewhere, have entered into an engagement to proceed on the first favourable opportunity to Jerusalem to await in prayer and fasting the coming of the Messiah.—*Eng. Paper.*

Cure for the sting of a Wasp.—Carbonate of potash is an instant cure for the sting of the Wasp; applied to the wound it immediately removes pain.

To our Correspondents.

We have several communications on hand, which are necessarily deferred. They will appear as soon as we can find room for them.

NOTICE.

The Agents of the Morning Star are respectfully requested to make known at an early period the number of copies of the paper they will need for 1843.

NOTICE.

Copies of VOL. I. and II. of the Morning Star, bound in *one volume* may be had on application at the American Mission Press, Manepy.—Price—10 *shillings* with a discount to Agents.

NOTICE.

The undersigned respectfully reminds his subscribers to the "M. Star," that the close of the 4th quarter of the year 1842 is the time for the close of subscription in advance for the 1st quarter of the year 1843.

S. TAMBIAHPULLY.

அறிவித்தல்.

நம்மால் நாளதுவரையிற் பிரசுரஞ் செய்துவரப்பட்ட உதயதாரகைத்த பத்திரிகைக்குக் கையொப்பக்காரர் வெகுபேராயிருக்தாலும் பணத்தை முறைபோலே செலுத்துகிறவர்கள் கொஞ்சப்பேராயிருக்கிறதினால் மேற்படி பத்திரிகையைப் போன மாதக்கடைசிமுகனேயாக நிறுத்திவிடவாயிற்று:

இதுவும் மேற்படி பத்திரிகைக்குக் கையொப்பக்காரராயிருக்த சகலரும் தங்கள் பேரில் நிலுவையாய் இருக்கிற பணங்களை இதனடுத்தமாசமே. முதலந் திகதிக்கு முன்னிதாகக் காரியகாரருக்குச் செலுத்திவிடவேண்டியது. அப்படிச் செலுத்தாமல் இருக்கில அவர்களின்னரென்பதை உதயதாரகையிற் பிரசித்தஞ்செய்யலாகும்.

இப்படிக்கு

கொழும்பில் தபாசபதி. } D. J. WEERESEKERRA.
காரத்திகை மீ. சுயதீ. } எட்டிடிற்றர்.

CONTENTS.—அட்டவணை.

On the advantages of the European Sciences, &c. -	297		புறங்கள்.
The influence of Christianity in Great Britain -	299	இங்கிலாந்துதேச இராச்சிய விருத்தி	299
Missionary Enterprizes in the South Seas - -	300	தென் சமுத்திரத் தீவில் கட	300
Communications -	301-303	ந்த சங்கதி	301-303
Pancha-Tantra-Katei—Cural	304	கடிதங்கள்	bi.
On Gardener's Calendar	305	சகுன விளக்கங்கள்	304
Hints on the Theory and Practice of Gardening -	ib.	பஞ்சதந்திரக் கதை	ib.
To our Readers -	ib.	குறள்	306
Summary of News	308	கவனிப்புகள்	307
		புதினச் சங்கதிகள்	

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

உதயதாரகை.—MORNING STAR.

To be published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.

PROSPECTUS

OF THE MORNING STAR FOR 1843.

The "*Morning Star*" was established with especial reference to the benefit of the native community. It was designed primarily for the rising generation who have received instruction in missionary and other schools, and especially for those who have enjoyed the advantages of a superior education, and who may be expected to take an interest in the promotion of science and literature and of other branches of useful knowledge among their countrymen. It was hoped that by furnishing such a medium of communication with the native mind, and by the discussion of topics of general interest and utility which were familiar only to a few, that in the dormant mind of the community a spirit of inquiry would be awakened, and on the part of some, a desire for self-improvement excited. It was also believed that it would tend to enhance the value of a good education by enabling the recipient to impart some of the benefits of his acquirements to others, and that it would furnish the educated youth with a stimulus to make increasing attainments in knowledge.

These expectations have been realized to a pleasing extent, and the patrons of the paper have abundant encouragement, from the interest felt in it by the native community, to continue to give it their support.

The *Morning Star* for 1843 will be conducted on the same general plan as heretofore. It will be devoted to *Education, Science, Religion,* and *general Literature,* with occasional articles on other subjects of general interest and a brief notice of passing important events. Translations in English will be given of such Tamil communications as possess a peculiar interest to the English reader.

We shall reserve as much space in our columns as possible for communications from correspondents, and we hope they will come forward with increased interest to the discussion of those subjects that are likely to interest and profit our readers. The spirit of inquiry that has been awakened in the community on *moral* and *religious* subjects, encourages the hope that more attention will be given to them in future than has been given heretofore. There are great questions connected with these subjects, of fundamental importance to the well-being of man both for this world and for the next, and it is incumbent on every one to lay aside his prejudices, and calmly and patiently to inquire—"*What is truth?*" The "*Morning Star*" will advocate no doctrines either of morals or of religion, that are *contrary to reason,* or *unsupported by Scripture*; and room will gladly be given for those who entertain different views to exhibit the evidences of their faith. The time is fast approaching, if it has not already come, when the people of this country will demand a free and fair discussion of the merits of Christianity compared with those of Hinduism and Mohammedanism, and our correspondents would do well to give the subject their serious consideration.

In order to secure in each No. of the paper such a variety of matter that every reader shall find in it something that is pleasing and instructive to himself, it will be necessary, except in particular cases, where the nature of the subject forbids a division, that the articles be *short.* Our correspondents should therefore aim at conciseness in writing for the Star.

The arrangements for supplying the colums of the paper the coming year, so far as they are completed, include the following articles.

I. Beschi's Instructions to Catechists.
